# தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.

முன்னிலை : திருமதி.J.கிறிஸ்டல் பபிதா, எம்.எஸ்.சி., எம்.எல்.,
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 13 ஆம் நாள் திங்கட் கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 458/ 2018

C.N.R.No.TNTS02-000767-2018

அரசுக்காக :-
காவல் ஆய்வாளர்,
தென்காசி காவல் நிலையம்,
கு.எண் : 134 / 2018 . . . குற்றமுறையிடுபவர்

/ எதிராக /

செய்யது மசூது,
த.பெ. செய்யது சுலைமான்,
தென்காசி.
தற்போது – கௌரிநகர், 2வது தெரு,
குத்துக்கல்வலசை.

. . . எதிரி

இந்த வழக்கானது 24.10.2018 அன்று தென்காசி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.458/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தென்காசி, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, 10.03.2026 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு 04.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.R. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. M. சுடலைகுமார்

அவர்கள் ஆஜராகியும், வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்து இன்று (13.07.2026) இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

1. **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

கடந்த 08.03.2018 ம் தேதி இரவு 10.00 மணியளவில் புகார்தாரரின் மகன் மாரியப்பன் என்பவர் TN 76 AF 6217 என்ற பதிவு எண் கொண்ட ஹோண்டா சைன் பைக்கில் வடக்கிலிருந்து தெற்காக செல்லும் மதுரை – தென்காசி ரோட்டில் உள்ள குத்துக்கல்வலசை அண்ணாநகர் பஸ்ஸ்டாப்புக்கு முன்பாக சென்று கொண்டிருக்கும் போது அதே ரோட்டில் எதிரே தெற்கே இருந்து வடக்கு நோக்கி வந்த TN 76 AH 3081 என்ற பதிவு எண் கொண்ட Maruthu Susuki Swift காரை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று அவரின் பைக்கின் மீது இடித்து ரோட்டில் தள்ளி அவருக்கு தலையின் பின்பக்கம் பலத்த ரத்த காயத்தையும், வலது கணுக்காலுக்கு மேல் எலும்பு முறிவும் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறப்பு ஏற்படுத்தியதாகவும், எனவே எதிரி இதச பிரிவுகள் 279, 304(A) –ன் குற்றங்கள் புரிந்துள்ளதாக தென்காசி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அழைப்பாணையின்பேரில் ஆஜரான எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.விமு.ச.207 பிரிவின் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரி குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் பற்றி எதிரியிடம் வினவியபோது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்தார். எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

4. இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும்

பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அசா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிதரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:–

கடந்த 08.03.2018 ம் தேதி அசா–1 சுப்பிரமணியன் மகன் இடைகாலில் உள்ள சைட்டுக்கு சென்றுவிட்டு திரும்ப வரும் போது அண்ணாநகர் ஸ்டாப் ஆஞ்சநேயர் கோவில் பக்கத்தில் கார் வந்து மோதி விட்டதாக அசா–1 ன் மகனுடன் வேலை பார்த்த நபர் அசா–1 டம் போன் மூலம் தகவல் தெரிவித்துள்ளார். அசா–1 சம்பவ இடத்திற்கு சென்றுள்ளார். அசா–1 ன் மகனுக்கு பின்னந்தலையிலும், வலது காலிலும் அடிபட்டு ரத்தம் வந்துள்ளது. சம்பவ இடத்திலேயே அசா–1 ன் மகன் இறந்துள்ளார். பின்னர் அசா–1 தென்காசி காவல் நிலையம் சென்று புகார் மனு அசாஆ–1 கொடுத்துள்ளார்.

6. கடந்த 08.03.2018 ம் தேதி 23.30 மணிக்கு தென்காசி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் சிலுவை ஆன்டனி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது அசா–1 சுப்பிரமணியன் என்பவர் கொடுத்த புகார் மனு அசாஆ–1 ஐ பெற்று அதனபடிப்படையில் முதல் தகவல் அறிக்கை அசாஆ– 2 பதிவு செய்துள்ளார். பின்னர் அசா–6 ஆய்வாளர் பாலமுருகன் என்பவர் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 09.03.2018 ம் தேதி அதிகாலை 00.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் லட்சுமணன், பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அசாஆ– 3 மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ–4 தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 09.03.2018 ம் தேதி காலை 7.00 – 8.00 மணிக்கு தென்காசி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார் முன்னிலையில் இறந்துபோன மாரியப்பன் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை

அறிக்கை அசாஆ–5 தயார் செய்துள்ளார். எதிரியை காவல் நிலையத்தில் வைத்து கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார். அன்றைய தினமே வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ஆனந்த் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அசாஆ–6, அசாஆ–7 பெற்றுள்ளார். பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சிவராமகௌதம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று அசாஆ–8 பெற்றுள்ளார். பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் ஆய்வாளர் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

7. எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் படி எதிரிக்கு பாதகமாக உள்ள, சாட்சிகளின் சாட்சியங்களை எடுத்துக் கூறி வினவிய போது எதிரி 'பொய் சாட்சி' என்றும் தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் 'இல்லை' என்றும் கூறியுள்ளார்.

8. <u>இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>

அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 279, 304 (A) –ன் படியான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

9. **<u>தீர்வு:–</u>**

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், புகார்தாரரின் மகன் மாரியப்பன் என்பவர் TN 76 AF 6217 என்ற பதிவு எண் கொண்ட ஹோண்டா சைன் பைக்கில் வடக்கிலிருந்து தெற்காக செல்லும் மதுரை – தென்காசி ரோட்டில் உள்ள குத்துக்கல்வலசை அண்ணாநகர் பஸ்ஸ்டாப்புக்கு முன்பாக சென்று கொண்டிருக்கும் போது அதே ரோட்டில் எதிரே தெற்கே இருந்து வடக்கு நோக்கி வந்த TN 76 AH 3081 என்ற பதிவு எண் கொண்ட Maruthu Susuki Swift காரை எதிரி அதிவேகமாகவும்,

அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று அவரின் பைக்கின் மீது இடித்து ரோட்டில் தள்ளி அவருக்கு தலையின் பின்பக்கம் பலத்த ரத்த காயத்தையும், வலது கணுக்காலுக்கு மேல் எலும்பு முறிவும் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறப்பு ஏற்படுத்தியதாக உள்ள இந்த வழக்கானது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது எனவும் எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

10. எதிரிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், எதிரியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்படவில்லை எனவும் சம்பவத்தை கண்ணுற்றதாக அரசுத்தரப்பில் தனிநபர் சாட்சியங்கள் எதுவுமில்லை எனவும், இறந்து போன நபர் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டி வந்து இந்த விபத்தை ஏற்படுத்தியுள்ளார் எனவும் அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

11. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில், புகார்தாரரின் மகன் மாரியப்பன் என்பவர் TN 76 AF 6217 என்ற பதிவு எண் கொண்ட ஹோண்டா சைன் பைக்கில் வடக்கிலிருந்து தெற்காக செல்லும் மதுரை – தென்காசி ரோட்டில் உள்ள குத்துக்கல்வலசை அண்ணாநகர் பஸ்ஸ்டாப்புக்கு முன்பாக சென்று கொண்டிருக்கும் போது அதே ரோட்டில் எதிரே தெற்கே இருந்து வடக்கு நோக்கி வந்த TN 76 AH 3081 என்ற பதிவு எண் கொண்ட Maruthu Susuki Swift காரை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று அவரின் பைக்கின் மீது இடித்து ரோட்டில் தள்ளி அவருக்கு தலையின் பின்பக்கம் பலத்த ரத்த காயத்தையும், வலது கணுக்காலுக்கு மேல் எலும்பு முறிவும் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறப்பு ஏற்படுத்தியதாக கூறப்பட்டு எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) –ன் படி குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

12. அசா–1 சுப்பிரமணியன் என்பவர் இறந்துபோன மாரியப்பன் என்பவரின் தந்தை ஆவார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் சம்பவத்தை கேள்விப்பட்டு அசாஆ–1 புகார் கொடுத்ததாக கூறியுள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட அசா–2 கணேசன் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் சம்பவ நாள் இறந்துபோன மாரியப்பன் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது எதிரே எதிரி காரில் வேகமாக வந்து இருசக்கர வாகனத்தில் உரசி இறந்தபோன நபரை கீழே தள்ளி இழுத்து சென்றபோது அதிக சத்தம் கேட்டு தான் பார்த்ததாகவும் மாரியப்பனுக்கு வலது காலிலும், தலையிலும் தலை பின்பக்கமும் அடிப்பட்டு இறந்தார் எனவும் கூறியுள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற நபர்களாக அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா–3 பழனிசாமி, அசா–4 புதியவன், அசா–5 பிரம்மநாயகம் ஆகியோர்கள் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

13. எதிரிதரப்பில் எதிரியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்படவில்லை எனவும் இறந்துபோன நபர் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டி வந்து இந்த விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் எனவும் கூறப்பட்டுள்ளது. இறந்துபோன மாரியப்பன் என்பவர் வடக்கிலிருந்து தெற்காக இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்ததாகவும் எதிரி தெற்கிலிருந்து வடக்காக மாரூதி காரில் சென்று விபத்தை ஏற்படுத்தியதாகவும் அரசுத்தரப்பில் கூறப்பட்டுள்ளது.

14. அசாஆ–4 மாதிரி வரைபடத்தை பார்க்கும் போது சம்பவம் தென்வடல் ரோட்டின் நடுவில் நடந்ததாக தெரியவருகிறது. மேலும் இரண்டு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அசாஆ–6, அசாஆ–7 ஆகியவற்றை பார்க்கும் போது இரண்டு வாகனங்களின் முன்பகுதியில் பலத்த சேதாரம் ஏற்பட்டதாக தெரியவருகிறது. அசாஆ–6, அசாஆ–7 ஆகியவற்றை பார்க்கும் போது இரு வாகனங்களும் நேருக்கு நேர் மோதி கொண்டதாக தெரியவருகிறது. இறந்த போன மாரியப்பன் வடக்கிலிருந்து தெற்காக வாகனத்தை ஓட்டி வரும்

போது ரோட்டிற்கு இடது புறமாக சென்றிருந்தால். இந்த விபத்து ரோட்டின் நடு பகுதியில் ஏற்பட்டு இருக்க வாய்ப்பில்லை. மேலும் சம்பவத்தை கண்ணுற்றதாக அசா–2 ன் சாட்சியத்தை தவிர வேறு எந்த சாட்சியங்களும் அரசுத்தரப்பில் இல்லை. இந்நிலையில் எதிரியின் அஜாக்கிரதையினால் தான் இந்த விபத்து ஏற்பட்டதா என இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

15. மேலே கூறிய விரிவான விளக்கங்களில் இருந்து, அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கலாம் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 279, 304(A) –ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி குற்றவாளி அல்ல என்றும் முடிவு செய்து, எதிரியை இதச பிரிவுகள் 279, 304(A) – ன் படியான குற்றங்களிலிருந்து குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 255(1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.

17. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 13 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.14 14:09:03 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> : –

| அரசுத்தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திரு. சுப்பிரமணியன் | புகார்தாரர் |
| 2 | திரு. கணேசன் | கண்ணுற்ற சாட்சி |
| 3 | திரு. பழனிசாமி | கண்ணுற்ற சாட்சி |
| 4 | திரு. புதியவன் | கண்ணுற்ற சாட்சி |
| 5 | திரு. பிரம்மநாயகம் | கண்ணுற்ற சாட்சி |
| 6 | திரு. பாலமுருகன் (காவல் ஆய்வாளர்) | புலன் விசாரணை அதிகாரி |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :–

| அரசுத்தரப்பு சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1. | புகார் மனு | அ.சா.1 |
| 2 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| 3 | பார்வை மகஜர் | அ.சா.6 |
| 4 | வரைபடம் | அ.சா.6 |
| 5 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.6 |
| 6 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.6 |
| 7 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.6 |
| 8 | பிரேத பரிசோதனை சான்று | அ.சா.6 |

<u>அரசுத்தரப்பு சான்று பொருட்கள்:–</u> இல்லை

<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : – இல்லை

<u>எதிரி தரப்பு சான்று பொருள்கள்</u>: – இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.14 14:09:08 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>பின் குறிப்பு:–</u>

- ✓ எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தார்.
- ✓ சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
- ✓ காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

,